# காங்கயம் நகராட்சி
## மன்றக்கூட்டத்தாள்

**நிகழும் விகாரி வருடம் தமிழ் மாதம் ஆவணி–13–ஆம் நாள் ஆங்கில வருடம் 2019 ஆகஸ்ட் 30 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற சாதாரணகூட்டம் நடவடிக்கைகள் விபரம்.**

**மன்றபொருள்:1**

**கோப்பு எண் : 911/2019/இ1**

காங்கயம் நகராட்சி பொதுநிதி 2019–20 ன் கீழ் ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சியில் 17 திறந்தவெளிக் கிணறுகளின் அருகிலுள்ள வீடுகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் திறந்தவெளி கிணறுகளில் மழைநீரை சேகரித்து நிலத்தடி நீரை அதிகப்படுத்தும் பணிக்காக 19.07.19–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. சுப்பையா மதிப்பீட்டை விட +4.90 % அதிகம்
2. வடிவேல் மதிப்பீட்டை விட +5.70 % அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ளதிருவாளர். சுப்பையா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1297 . நாள்.30.08.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**மன்றபொருள்:2**

**கோப்புஎண் : 1933/2016/அ2**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்டுள்ள குத்தகை இனங்களுக்கு 03.07.2019 அன்று ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் எவரும் ஏலம் கேட்க முன்வரவில்லை.எனவே மறுஏலம் விட மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண். | ஏலம் விடப்பட வேண்டிய கடைகள் | கடை எண்கள் |
|---|---|---|
| 1. | ஐ.டி.எஸ்.எம்.டி கடை எண் | 11,12 |
| 2. | தினசரி மார்க்கெட் வடக்குப் பார்த்த கடை எண் | 5,7,9,10,12 |
| 3. | பழையப்பேருந்து நிலையக் கடை எண் | 5 |
| 4. | தாட்கோ வணிக வளாகக் கடை எண் | 1,2,3,5,6,9 |
| 5. | தினசரி மார்க்கெட் நுழைவு வாயிலில் கட்டப்பட்ட வடக்குப் பார்த்த புதிய கடை எண் | 2 |
| 6. | பேருந்து நுழைவுக் கட்டணம் | |

**அலுவலகக் குறிப்பு:–**

மறுஏலம் விட மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1298 . நாள்.30.08.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**மன்றபொருள்:3**

**ந.க.எண்.1105/2019/எச்1**

காங்கயம் நகராட்சியில் பொதுநிதி 2019–2020–இன் கீழ் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் தரம் பிரிக்கப்பட்டு MCC மற்றும் குப்பைகிடங்கிற்கு கொண்டு செல்லும் பேட்டரி வாகனங்களுக்கு GPS பொருத்திடவும் மற்றும் மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளில் நீரின் அளவை கண்டறிய சென்சார் கருவி பொருத்திடவும், மேற்படி பணிக்காக 25.07.2019–இல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1.சாப்ட்பெரி சொலிசன் – மதிப்பீட்டை விட –0.51% அதிகம்
2.ரியல்டெக் சிஸ்டம் – மதிப்பீட்டை விட –4.41% அதிகம்

**அலுவலுக குறிப்பு:**

1. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.51% சதவீதம் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர். சாப்ட்பெரி சொலிசன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கி நடவடிக்கை எடுத்தமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1299 . நாள்.30.08.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**மன்றபொருள்:4**

**ந.க.எண்.2070/2016/அ2**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்துநுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 27.08.2019 அன்று 4–ஆவது பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

| வ. எண் | ஏலம் கோரியவர்கள் விபரம் | கடை எண் | உயர்ந்த பட்ச ஏலக் கேள்வி தொகை (ரூ) | உயர்ந்தபட்ச ஒப்பந்த புள்ளி தொகை(ரூ) |
|---|---|---|---|---|
| 1. | திரு.P.செந்தில்நாதன், 27,இரண்டாவது தெரு, அய்யாசாமிநகர் காலனி, காங்கயம் | பேருந்துநுழைவுக் கட்டணம் வசூல்செய்யும் உரிமம் | | ரூ.5,00,000/– |
| 2. | திரு.R.தங்கராஜ் 1,சிவகிரி, ஈரோடு | பேருந்துநுழைவுக் கட்டணம் வசூல்செய்யும் உரிமம் | ரூ.5,65,000/– | ரூ.5,40,000/– |
| 3. | திரு.K.நீலகண்டன் திருப்பூர் | பேருந்துநுழைவுக் கட்டணம் வசூல்செய்யும் உரிமம் | ரூ.5,66,000/– | – |
| 4. | திரு.ரமேஷ் ராஜீவ் நகர், காங்கயம் | பேருந்துநுழைவுக் கட்டணம் வசூல்செய்யும் உரிமம் | – | ரூ.5,40,000/– |

மேற்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மேற்கண்ட ஆண்டு குத்தகைஇனத்திற்கு 3 தடவை ஏலம் முடிவடைந்து எவரும் ஏலம் கோர முன் வரவில்லை தற்பொழுது4–வது தடைவ ஏலத்தில் உயர்ந்தபட்ச ஏல கேள்வியாக ரூ.5,66,000/–க்கு கோரப்பட்டுள்ளது. தற்பொழுது நகராட்சியால் 3 நகராட்சி பணியாளர்களை கொண்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. அதன்படி நாளொன்றுக்கு 270 பேருந்துகள் வீதம் ரூ.2160/– வசூல்செய்யப்பட்டுகிறது. எனவே ,ஆண்டிற்கு 2160*365 = ரூ.7,88,400/– வசூலிக்கப்பட்டுவருகிறது. மேலும் 3 பணியாளர்களுக்கும் குறைந்தபட்ச ஊதியம் ரூ.341 என 30*341=10230*3=30690 30690*12=ரூ.368280/– எனவருடஊதியம் செலவுஏற்படுகிறது. மொத்த வருட வருமானம் ரூ.7,88,,400/–ல் ஊதியம் ரூ.3,68,280/– போக ரூ.4,20,120/– நகராட்சிக்கு வருமானம் ஏற்படுகிறது. தற்பொழுது ரூ.5,66,000/–க்கு ஏலம் கோரப்பட்டுள்ளதால் இந்த ஏல கேள்வியை மன்றம் ஏற்று திரு.நீலகண்டன் என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1300 . நாள்.30.08.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**மன்றபொருள்:5**

**கோப்பு எண் : 37/2019/இ1**

காங்கயம் நகராட்சி பொதுநிதி 2019–20 ன் கீழ் காங்கயம் நகராட்சி உரக்கிடங்கில் சேகரமாகும் பிளாஸ்டிக் பொருட்களை பேக்கிங் செய்து வைக்க Baling machine வாங்கும் பணிக்காக திருத்திய மதிப்பீடு ரூ.6.60 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கும் மற்றும் 31.07.19–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1.Linga Agri Trading and Machinery pvt Ltd – மதிப்பீட்டு விலை விகிதம்

2. Sri Balaji Industries - மதிப்பீட்டை விட 0.76 % அதிகம்

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மேற்படி பணிக்கு ஏற்படும் கூடுதல் செலவினத்திற்குரிய திருத்திய மதிப்பீட்டு தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்.

2. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர். Linga Agri Trading and Machinery pvt Ltd அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்திரவு வழங்கி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1301 . நாள்.30.08.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**மன்றபொருள்:6**

**கோப்புஎண்.2071/2016/அ2**

காங்கயம் நகாட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய நுழைவுக்கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 07.08.2109 அன்று ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரபப்டடதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

| வ. எண் | ஏலம் கோரியவர்கள் விபரம் | கடை எண் | உயர்ந்தபட்ச ஒப்பந்துபுள்ளி தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1 | P.செந்தில்நாதன்,<br>27,இரண்டாவது தெரு,<br>அய்யாசாமி நகர் காலனி,<br>காங்கயம். | பேருந்து நிலைய நுழைவுக்கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ரூ.3,50,000/– |

மேற்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது, மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

மேற்படி ஆண்டு குத்தகையானது ஏற்கனவே கூடுதல் ஏலம் போயிருப்பதாலும், மேலும் கூடுதல் ஏலம் போக வாய்ப்புள்ளது என்பதாலும் மறு ஏலம் விட மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1302 . நாள்.30.08.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**மன்றபொருள்:7**

**கோப்பு எண் : 955/2011 /இ1**

காங்கயம் நகராட்சியில் கட்டுமானம் மற்றும் இடைவெளி நிரப்பும் திட்டம் 2011–12 ன் கீழ் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் சென்னிமலைரோட்டில் ஏற்கனவே உள்ள மயானப்பகுதியில் எரிவாயு தகனமேடை அமைக்கப்பட்டு நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஆகவே, மேற்படி எரிவாயு தகன மேடையில் உள்ள LPG Firing system இயக்குவதற்கு சிலிண்டர்கள் தேவைப்படுவதை முன்னிட்டு சிலிண்டர்கள் எரிவாயு டீலர் ஸ்ரீ சிவசக்தி கேஸ் கம்பெனி நிறுவனத்திடமிருந்து பெறுவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சத்திற்கும் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) மற்றும் அதற்குண்டான தொகையை மேற்படி நிறுவனத்திற்கு வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1303 . நாள்.30.08.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**மன்றபொருள்:8**

**கோப்புஎண் : 1933/2016/அ2**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்டுள்ள குத்தகை இனங்களுக்கு **07.08.2019** அன்று ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் எவரும் ஏலம் கேட்க முன்வரவில்லை,எனவே மறுஏலம் விட மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண். | ஏலம் விடப்பட வேண்டிய கடைகள் | கடை எண்கள் |
|---|---|---|
| 1. | ஐ.டி.எஸ்.எம்.டி கடை எண் | 11,12 |
| 2. | தினசரி மார்க்கெட் நுழைவு வாயிலில் கட்டப்பட்ட வடக்குப் பார்த்த புதிய கடை எண் | 2 |

**அலுவலகக் குறிப்பு:–**

மறுஏலம் விட மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1304 . நாள்.30.08.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**மன்றபொருள்:9**

**கோப்பு எண் : 1155/2019/இ1**

காங்கயம் நகராட்சி பொதுநிதி **2019–20** ன் கீழ் ரூ.5.40 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு **3** எண்ணிக்கையிலான BOV வாங்கும் பணிக்காக **31.07.19**–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. சார்ப் சிஸ்டம் — மதிப்பீட்டை விட - 0.04 % குறைவு

2. செல்வரா எண்டர்பிரைசஸ் — மதிப்பீட்டை விட + 0.21 % அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட - 0.04 % சதவீதம் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர். சார்ப் சிஸ்டம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1305 . நாள்.30.08.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**மன்றபொருள்:10**

**கோப்பு எண் : 523/2019/இ1**

காங்கயம் நகராட்சி பொதுநிதி **2019–20** ன் கீழ் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் பேட்டரி வாகனங்களுக்கு வருடாந்திர பராமரிப்பு செய்யும் பணிக்காக **31.07.19**–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. சார்ப் சிஸ்டம் — மதிப்பீட்டை விட - 0.05 % குறைவு

2. செல்வரா எண்டர்பிரைசஸ் — மதிப்பீட்டை விட + 0.10 % அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட - 0.05 % சதவீதம் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர். சார்ப் சிஸ்டம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1306 . நாள்.30.08.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**மன்றபொருள்:11**

**கோப்புஎண்.755/2016/அ2**

காங்கயம் நகாட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையக் கடை எண்.5—க்கு 07.08.2109 அன்று ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில். கடை எண்.5—க்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டவாறு கோரப்பட்டுள்ளது.

| வ. எண் | ஏலம் கோரியவர்கள் விபரம் | கடை எண் | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை (ரூ) | உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | திரு .அகமது இப்ராஹிம், 41,காந்தி நகர், காங்கயம். | பழையப்பேருந்து நிலையக் கடை எண். 5 | 15000/— | 16000/— |
| 2 | திரு.J.சுரேஷ் களிமேடு காங்கயம் | பழைய பேருந்து நிலையக் கடை எண். 5 | 15500/— | 15000/— |

மேற்கண்டவாறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது, மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மேற்படி கடை ஏற்கனவே கூடுதல் ஏலம் போயிருப்பதாலும், மேலும் கூடுதல் ஏலம் போக வாய்ப்புள்ளது என்பதாலும் மறு ஏலம் விட மன்றம் முடிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1307 . நாள்.30.08.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**மன்றபொருள்:12**

**கோப்புஎண்.358/2013/அ2**

காங்கயம் நகாட்சிக்கு சொந்தமான தாட்கோ வணிக வளாகக்கடை எண் 1,2,3,5,6 மற்றும் 9 க்கு 07.08.2019 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கடை எண் 9 க்கு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது. இதனை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் மீதமுள்ள கடைளுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை எனவே இதனை மறுஏலம் விட மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | பெயர் | கடை எண் | உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.P.முருகேசன் | தாட்கோ வணிக வளாகக் கடை எண் 9 | ரூ.4830/— |

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. கடை எண் 9 க்கு ஏற்கனவே உள்ள வாடகை தொகையை விட 5% கூடுதல் தொகை கோரியுள்ளமையால் இவ்வொப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.

2. ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெறாத கடைகளுக்கு மறுஏலம் நடத்த மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1308 . நாள்.30.08.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**மன்றபொருள்:13**

**கோப்புஎண்.2072/2016/அ2**

காங்கயம் நகாட்சிக்கு சொந்தமான தினசரி மார்க்கெட் வடக்கு பார்த்த கடை எண் 5,7,9,10 மற்றும் 12–க்கு 07.08.2019 அன்று ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கடைஎண்.9 மற்றும் 10–க்கு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பெயர் | கடை எண் | உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | P.ரத்தினசபாபதி<br>சூலூர்<br>கோவை | தினசரி மார்க்கெட் வடக்கு பார்த்த கடை எண் 9 | 3000/– |
| 2. | P.ரத்தினசபாபதி<br>சூலூர்<br>கோவை | தினசரி மார்க்கெட் வடக்கு பார்த்த கடை எண்10 | 3000/– |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. மேற்படி கடை இது வரை 35 தடவை ஏலம் விடப்பட்டு ஏலம் போகாத காரணத்தினால் நகராட்சிக்கு வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு மேற்படி ஏலத் தொகையினை ஏற்று கடையினை வாடகைக்கு விட மன்றம் அனுமதிக்கலாம்.

2. ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் வரப்பெறாத கடைகள் 5,7 மற்றும் 12 –க்கு மறு ஏலம் கோர மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1309 . நாள்.30.08.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**மன்றபொருள்:14**

**கோப்பு எண் : 290/2019/எச்1**

காங்கயம் நகராட்சி பொது நிதி 2019–2020இன் கீழ் இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் செயல்படும் MCC மற்றும் Compost Yard இல் வரும் மக்கும், மக்காத குப்பைகளை மக்க வைத்திட தேவையான EM- 1 Solution-300 லிட்டர் விநியோகம் செய்திட 08.08.2019 அன்று நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் – மதிப்பீட்டு விலையை விட + 1.33 % அதிகம்
2. ஸ்ரீ விநாயாக பார்மா – மதிப்பீட்டு விலையை விட + 12.00 % அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட + 1.33 % அதிகமாக விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர்.ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1310 . நாள்.30.08.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**மன்றபொருள்:15**

**ந.க.எண்.854/2019/எப்1**

காங்கயம் நகராட்சி, வார்டு எண்.3, சென்னிமலை ரோடு, ரீ.ச.எண்கள்.34/2A, 2B, 1B2, 3A1, 35/2, 36/2A மற்றும் 36/2B இல் 4.60 1/2 ஏக்கர் மனைப்பரப்பில் அமையும் ஆர்.சி.சி திருமண மண்டபக்கட்டிடத்திற்கு பார்வையில் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி 34/2B, 34/2A மற்றும் 34/1B2 சர்வே எண்கள் திறவினம் (OSR) 1866.23 ச.மீட்டர் பரப்பளவு கொண்ட இடம் காங்கயம் சார்பதிவாளர் ஆவண எண்.5324/2018, நாள்.09.11.2018 நன்கொடையாக ஒப்படைக்கப்பட்டது. மேலும் மேற்படி இடத்தை இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.1044/2018, நாள்.30.11.2018–இல் மேற்படி (OSR) இடத்தை ஏற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி திறவிடமாக ஒப்படைக்கப்பட்ட 1866.23 சதுர மீட்டர் இடத்தில் N.S.N.நடராஜ் மற்றும் N.S.N.டிரஸட் நிறுவனத்தினர் பூங்கா அமைத்து அதனை அவர்களின் சொந்த செலவில் பராமரிப்பு செய்ய அனுமதி வேண்டி விண்ணபம்பம் செய்துள்ளனர். மேற்படி தெரிவித்துள்ள (OSR) திறவிடம் 1866.23 ச.மீ இடத்தில் NSN.நடராஜ் மற்றும் NSN.டிரஸ்ட் நிறுவனத்தினர் அவர்களின் சொந்த செலவில் பூங்கா அமைக்கவும் மற்றும் அவர்களுடைய செலவில் பராமரிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1311 . நாள்.30.08.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**மன்றபொருள்:16**

**ந.க.எண்.1105/2019/எச்1**

காங்கயம் நகராட்சியில் பொதுநிதி 2019–2020–இன் கீழ் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் தரம் பிரிக்கப்பட்டு MCC மற்றும் குப்பைகிடங்கிற்கு கொண்டு செல்லும் பேட்டரி வாகனங்களுக்கு GPS பொருத்திடவும் மற்றும் மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளில் நீரின் அளவை கண்டறிய சென்சார் கருவி பொருத்திடவும், மேற்படி பணிக்காக 25.07.2019–இல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1.சாப்ட்பெரி சொலிசன் – மதிப்பீட்டை விட –0.51% அதிகம்
2.ரியல்டெக் சிஸ்டம் – மதிப்பீட்டை விட –4.41% அதிகம்

**அலுவலுக குறிப்பு:**

1. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.51% சதவீதம் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர். சாப்ட்பெரி சொலிசன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கி நடவடிக்கை எடுத்தமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1312 . நாள்.30.08.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**மன்றபொருள்:17**

**கோப்புஎண்.755/2019/எச்2**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 18 முடிய உள்ள பகுதிகளில் தினசரி சேகரமாகும் மக்கும் குப்பைகளை உரம் தயார் செய்யும் பணிக்கு நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையத்தில் (MCC)–2 டன் அளவு உரம் தயார் செய்யும், பணியும் மற்றும் சென்னிமலை ரோட்டில் உள்ள உரக்கிடங்களில் (Compost yard) 4 டன் அளவில் உரம் தயார் செய்ய Windrows method இல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது மேற்கண்ட பகுதியில் பழைய குப்பைகளை (Legasy Waste) தரம்பிரித்து Biomining இல் குப்பைகளை அப்புறப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே மேற்படி இடத்தில் உரம் தயார் செய்யும் இடம் தேவைப்பவதால் தென்புற பகுதியில் தற்காலிக தகர செட் அமைக்கப்பட்டு, அதில் பிளாஸ்டிக் தொட்டி (Poly bag tub) அமைக்க தேவையான Polybag 10 எண்ணிக்கைகள் பொது சுகாதார அவசர அவசியம் கருதி Online shopping (Amazon.in) மூலம் ரூ.10325 x 2 = ரூ.20650/– க்கு புதிதாக வாங்கி பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே மேற்கண்ட தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1313 . நாள்.30.08.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**மன்றபொருள்:18**

**ந.க.எண். 936/2018/சி1**

காங்கேயம் நகராட்சி தேர்வுநிலை பேரூராட்சியாக இருந்து 01.06.2010 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக அரசாணை நிலை எண். 99, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 01.06.2010இன்படி செயல்பட்டு வருகிறது. அரசாணை நிலை எண். 30, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 13.02.2013இல் இந்நகராட்சிக்கு ஒரு நகரமைப்பு ஆய்வாளர் பணியிடம் தோற்றுவித்து அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நகரமைப்பு ஆய்வாளர் பணியிடம் நிரப்பப்பட்டது. தற்போது நகரமைப்பு ஆய்வாளர் பணியிடம் 30.11.2016 முதல் காலியாக உள்ளது. ஆறு மாத காலத்திற்கு மேலாகிவிட்டதாலும், நாளது வரை கூடுதல் பொறுப்பாக வெள்ளகோவில் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் பணி செய்து வருகிறார்.

இந்நிலையில், கட்டிட விண்ணப்பங்கள் மாதத்திற்கு 10 விண்ணபத்திற்கு மேலாக பெறப்படுவதால், 30 நாட்களுக்குள் கட்டிட அனுமதி வழங்கல் மற்றும் தனிமனை வரன்முறைபடுத்துதல், மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்குதல் கோப்புகளின் மேல் நடவடிக்கை எடுப்பதற்கு கால தாமதமாகிறது. மேலும், ஆக்கிரமிப்பு குறித்த நடவடிக்கை எடுப்பது மற்றும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு பணிகள் ஆய்வு செய்து நடவடிக்கை எடுப்பது குறித்த விவரங்களை மாவட்ட ஆட்சித் தலைவர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் ஆகியோருக்கு உடனுக்குடன் அனுப்புவதில் கால தாமதமாகிறது.

மேலும் இந்நகராட்சி மொத்த வருமானத்தில் பணியாளர்களின் ஊதிய செலவினம் 49 விழுக்காடுக்கு குறைவாக உள்ளதால், மேற்படி நகரமைப்பு ஆய்வாளர் பணியிடத்தினை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் ஆணையாளர் அவர்கள் நியமனம் செய்து கொள்வதற்கு ஆறு மாதத்திற்கு மேலாக பணியிடம் காலியாக இருப்பதால் உரிய அனுமதி வழங்குமாறு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

நகரமைப்பு ஆய்வாளர் பணியிடத்தின் அவசியம் கருதி பணியிடத்தினை பூர்த்தி செய்து கொள்ள அனுமதி வழங்க கோரி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1314 . நாள்.30.08.2019**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**மன்றபொருள்:19**

**கோப்புஎண்.755/2016/அ2**

காங்கயம் நகாட்சிக்குசொந்தமானபழையபேருந்துநிலையக் கடை எண்.5–க்கு 27.08.2019அன்றுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகோரப்பட்டதில். கடை எண்.5–க்கு பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள்கீழ்கண்டவாறுகோரப்பட்டுள்ளது.

| வ. எண் | ஏலம் கோரியவர்கள்விபரம் | கடை எண் | உயர்ந்தபட்சஏல க்கேள்விதொகை (ரூ) | உயர்ந்தபட்சஒ ப்பந்தபுள்ளிதொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | திரு .அகமதுஇப்ராஹிம், 41,காந்தி நகர், காங்கயம். | பழையப்பேருந்து நிலையக் கடை எண். 5 | 20100/– | – |
| 2 | திருமதி.பெரியநாயகி, அய்யாசாமிநகர் காலனி காங்கயம் | பழையப்பேருந்து நிலையக் கடை எண். 5 | 20000/– | 17100/– |
| 2 | திரு.J.சுரேஷ் களிமேடு காங்கயம் | பழையபேருந்து நிலையக் கடை எண். 5 | – | – |

மேற்கண்டவாறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகோரப்பட்டுள்ளது, மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

உயர்ந்தபட்சஏலத்தொகையைமன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1315 . நாள்.30.08.2019**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**மன்றபொருள்:20**

**கோப்புஎண்.2072/2016/அ2**

காங்கயம் நகாட்சிக்குசொந்தமானதினசரிமார்க்கெட் வடக்குபார்த்த கடை எண் 5,7 மற்றும் 12–க்கு 27.08.2019 அன்றுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகோரப்பட்டதில் கடைஎண்.7–க்கு கீழ்கண்டவாறுஒப்பந்தப்புள்ளிவரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பெயர் | கடை எண் | உயர்ந்தபட்சஒப்பந்தபுள்ளி தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | P.சூர்யபிரகாஷ் தேவனம்பாளையம், ஆரத்தொழுவு, காங்கயம். | தினசரிமார்க்கெட் வடக்குபார்த்த கடை எண் 7 | 3000/– |

வரப்பெற்றஒப்பந்தப்புள்ளிமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. மேற்படிகடைஇதுவரை 36தடவைஏலம் விடப்பட்டுஏலம் போகாதகாரணத்தினால்நகராட்சிக்குவருவாய்இழப்பைதவிர்க்கும் பொருட்டுமேற்படிஏலத் தொகையினை ஏற்று கடையினைவாடகைக்குவிடமன்றம் அனுமதிக்கலாம்.

2. ஒப்பந்தப்புள்ளிமற்றும் ஏலம் வரப்பெறாதகடைகள் 5, மற்றும் 12 –க்கு மறு ஏலம் கோரமன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1316 . நாள்.30.08.2019**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**மன்றபொருள்:21**

**கோப்பு எண் :1237/2019 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட 17வது வார்டு எம்.பி.என் நகரில் தளபதி ரைஸ்மில் எதிர்ப்புற வீதியில் கழிவுநீர் செல்ல குழாய் பாலம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பாலத்தின் கொள்ளளவு போதுமானதாக இல்லாததால் மழைக்காலங்களில் தண்ணீர் வீடுகளில் புகுந்து விடுகிறது. இதனால், இந்த பாலத்தை கான்கீரிட் பாலமாக மாற்றியமைத்து தருமாறு இப்பகுதி பொதுமக்கள் கோரி வருகின்றனர். மேற்படி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1.50 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1 .மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1317 . நாள்.30.08.2019**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**மன்றபொருள்:22**

**கோப்பு எண் : 1271 /2019 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மழைநீரை சேகரிக்கும் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன்படி ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ள பகுதிகளில் கிணற்றை சுற்றிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு அமைக்கலாம். இந்த வகையில் 40 இடங்களில் ஆழ்குழாய் கிணற்றை சுற்றிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்தலாம். மேற்படி பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.10.00 (ரூபாய் பத்து இலட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1 .மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1318 . நாள்.30.08.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**மன்றபொருள்:23**

**கோப்பு எண் :1286 /2019 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட 6வது வார்டு ராஜா ஸ்கூல் பகுதியிலிருந்து மேற்காக ஓடைவரை வடிகால் அமைத்து தர கோரி இப்பகுதி பொதுமக்கள் கோரி வருகின்றனர். இந்த வடிகால் மிகவும் அவசியமாக உள்ளது. மேலும், இந்த வடிகால் அமைக்கும் பொழுது இரண்டு இடங்களில் பாலங்கள் அமைக்க வேண்டியுள்ளது. மேற்படி பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.10.00 (ரூபாய் பத்து இலட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1 .மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1319 . நாள்.30.08.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**மன்றபொருள்:24**

**கோப்பு எண் : 1288 /2019 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட கோவை ரோடு மற்றும் திருச்சி ரோடு பகுதிகளில் சுமார் 900 மீ நீளத்திற்கு தேசிய நெடுஞ்சாலையில் விரிவாக்கப் பணிகள் நடைபெறுவதால் இப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் விநியோக குழாய்கள் சாலையின் ஓரமாக மாற்றியமைக்குமாறு தேசிய நெடுஞ்சாலைத்துறை மூலம் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. குடிநீர் அவசியம் கருதி இப்பணி மிகவும் அத்தியாவசியமாக உள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.5.50 (ரூபாய் ஐந்து இலட்சத்து ஐம்பாதாயிரம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1 .மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1320 . நாள்.30.08.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

மன்றபொருள்:25

**கோப்பு எண் : 1289 /2019 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்டுள்ள இடங்களில் புதிய குடிநீர் இணைப்பு கோரி பொதுமக்கள் விண்ணப்பித்துள்ளனர். இப்பகுதிகளில் பகிர்மான குழாய்கள் இல்லை. எனவே, இப்பகுதிகளுக்கு குழாய் விஸ்தரிப்பு செய்ய வேண்டியுள்ளது.

1. மூர்த்திரெட்டி பாளையம்
2. வெங்கு நகர்
3. அகஸ்திலிங்கம் பாளையம்
4. செம்மாங்காளிபாளையம்
5. பொன்னிநகர் முதல் செம்மாங்காளிபாளையம்

அய்யாசாமி நகர் காலணி பகுதியில் வடிகால் அமைக்கும் பணிக்காக இப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் குழாய்களை மாற்றியமைக்க வேண்டியுள்ளது. பங்களாபுதூர் ரோடு பகுதிகளில் குடிநீர் விநியோகம் சீரமைக்கும் பொருட்டு கோவை ரோடு புதிய மேல்நிலைத்தொட்டி குடிநீர் விநியோகத்தில் மாற்றி இன்டர்லிங் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.10.00 (ரூபாய் பத்து இலட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக் குறிப்பு**</u>

1 .மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1321 . நாள்.30.08.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

மன்றபொருள்:26

**கோப்பு எண் : 1333/2019 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட 13வது வார்டு உடையார் காலணி பகுதியில் வாய்க்கால் கடந்து செல்ல ஒரு பாலம் அமைக்கப்பட்டுள்ளது . இந்த பாலம் அமைத்து சுமார் 20 ஆண்டுகள் இருக்கும். இந்த பாலம் பழுதடைந்து உடைந்துள்ளது. இதனால், இப்பகுதி மக்கள் கோவைரோடு, டவுன் பகுதிகளுக்கு செல்ல மூன்று கி.மீ தூரம் சுற்றி செல்ல வேண்டியுள்ளது. எனவே, பொதுமக்கள் மிகவும் சிரமப்படுவதால் இதனை உடன் சீரமைத்து தருமாறு இப்பகுதி பொதுமக்கள் கோரியுள்ளனர். இப்பணி மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2.00 இலட்சம் (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக் குறிப்பு**</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1322 . நாள்.30.08.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**ஆணையாளர்**
**மற்றும் தனி அலுவலர்**
**காங்கயம் நகராட்சி**